பெற்றோர் ஆசிரியர் கலந்தாய்வு கூட்டம்,

அவ்வை நவீன பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கலந்தாய்வு கூட்டம் பள்ளி வளாகத்தில் 20.03.2022 அன்று காலை 10 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் கூட்டம் துவங்கியது. இக்கூட்டத்தில் அவ்வை பள்ளி குழந்தைகளின் பெற்றோர்கள், பள்ளியின் கல்வி ஆலோசகர் பேராசிரியர் ம.வ.சீனிவாசன், என் சி இ ஆர் டி, புது டில்லி, திரு வி. சிவன், இணை பேராசிரியர் (கணிதம்), ராஜலட்சுமி தொழிற்கல்வி நிறுவனம் சென்னை, பள்ளியின் தாளாளர் வி சுரேஷ், அவ்வைப்பள்ளி அக்காக்கள் அனைவரும் கலந்துகொண்டனர். திருமதி வி அம்மு அன்பழகன் மென்பொறியாளர், கலிபோர்னியா, அமெரிக்கா காணொளி மூலமாக கலந்துகொண்டார்.

இந்த கூட்டத்தை நமது பள்ளி அக்கா திருமதி ரேவதி நிகழ்ச்சி நிரலை தயார் செய்து நடத்தினார். முதலில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. பின்னர் திருமதி வி அம்மு அன்பழகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதனை தொடர்ந்து அவ்வை பள்ளி ஆசிரியர் திருமதி மகாதேவி அவ்வைப் பள்ளி ஆரம்பித்த 2015 மே முதல் 2022 மார்ச் மாதம் வரை என்ன செய்திருக்கிறது என்பது பற்றியும் பள்ளியில் கற்றல் கற்பித்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பது பற்றியும் பாடத்திட்டங்கள் கால அட்டவணை இயல் திட்டங்கள் (Lesson Plan) எப்படி தயார் செய்யப்படுகிறது என்பது பற்றியும், கடந்த ஐந்து ஆண்டுகளில் அவ்வை குழந்தைகளின் சாதனைகள் பற்றியும் பேசினார். அதனைத் தொடர்ந்து பெற்றோர் குழந்தைகளுக்கிடையே புரிதல் எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றிய ஒரு குறும்படம் காண்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பள்ளி தாளாளர் சுரேஷ் அவர்கள் முதலில் அவ்வை பள்ளியின் வளர்ச்சிக்கு காரணமாக உறுதுணையாக இருப்பவர்கள் குறிப்பாக ஒவ்வொரு ஆசிரியர் பற்றிய அறிமுகத்தை அவர்களின் கல்வித்தகுதி, அனுபவங்கள் புகைப்படத்துடன் விளக்கினார். பின்னர் அவ்வை பள்ளி ஆரம்பகால வளர்ச்சி பற்றியும் அவ்வைப் பள்ளி 2015 ஆம் வருடம் மே மாதம் 28 அன்று முதலில் எம் ஜி ஆர் நகரில் எப்படி செயல்பட ஆரம்பித்தது என்பது முதல் தற்போது தாண்டியப்பனூர் கிராமத்தின் அருகில் உள்ள வளாகத்தில் எப்படி செயல்பட்டு வருகிறது என்பது பற்றி விளக்கினார். பின்னர் வி சிவன் அவர்கள் அவ்வை பள்ளி மற்ற பள்ளிகளிலிருந்து எப்படி வேறுபடுகிறது என்பதற்கு உதாரணங்களை சொன்னார். அவ்வைப் பள்ளி பெற்றோர்கள் விருப்பத்துக்கிணங்க அவர்களே பள்ளி சீருடைகளை தேர்ந்தெடுத்தார்கள் என்பது பற்றியும் பேசினார். மேலும் கொரோனா களங்களில் அவ்வை பள்ளி சார்பாக ஏழை எளிய மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கியது பற்றி புகைப்படங்களின் உதவியுடன் பேசினார்.

அதனை தொடர்ந்து பள்ளி வி சுரேஷ் அவர்கள் அடுத்த 5 ஆண்டுகளில் அவ்வைப் பள்ளி வளர்ச்சி என்பது எட்டாம் வகுப்புவரை வளரவேண்டும் என்றும் 2027 ஆண்டிற்குள் 12-ஆம் வகுப்பு வரை உயர வேண்டும் என்பது பற்றி பேசினார். பின்னர் பெற்றோர்கள் அவ்வை அக்காக்கள் எப்படி பங்காற்ற முடியும் என்பது பற்றி பேரா சீனிவாசன் பேசினார்.

இந்த பள்ளி வடிவேல் பழனியம்மாள் அறக்கட்டளையால் நடத்தப்படுகிறது. இந்தப் பள்ளி உருவாக்குவது முதல் இன்று வரை இந்த அறக்கட்டளை உறுப்பினர்களும் இதன் உறுப்பினர்களின் நண்பர்களும் உறவினர்களும் தங்களின் சேமிப்பை தந்து உதவுகிறார்கள். நம் எல்லோரின் நோக்கம் நமது ஊத்தங்கரை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள குழந்தைகள் நல்ல தரமான கல்வி கற்க வேண்டும். அதற்கான சூழலை உருவாக்குவது அவசியம். அதற்கு அவ்வை படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களும் ஒத்துழைப்பு தந்தால் இந்த பள்ளி மேலும் வளர்வதற்கு எல்லா அடிப்படையான மட்டுமல்ல நவீன வசதிகளை குழந்தைகளுக்கு செய்து தரமுடியும். இது சம்பந்தமாக ஒரு திட்டத்தை உங்கள் முன் வைக்கிறோம் அதைப்பற்றி சற்று சிந்தித்து பார்க்கவும்.

இந்த பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு குழந்தையின் பெற்றோரும் 50000 ரூபாய் வடிவேல் பழனியம்மாள் அறக்கட்டளைக்கு நன்கொடையாக தரவேண்டுகிறோம். அதன்பிறகு அந்த பெற்றோர்கள் அந்த குழந்தையின் பெற்றோர் பள்ளியின் கடைசி வகுப்பு வரை பள்ளி கட்டணம் கட்ட தேவையில்லை. பள்ளிக்கு பள்ளி வாகனத்தில் வந்தால் அதற்கான கட்டணம் மட்டும் செலுத்தினால் மட்டும் போதும். மாற்றாக 75000 ரூபாய் நன்கொடையாக தந்தால் எந்த கல்வி கட்டணமும், வாகன கட்டணம் உட்பட பள்ளிக்கு கட்டத் தேவையில்லை. அந்த குழந்தை எப்போது பள்ளியை விட்டு உயர்வகுப்பு படிக்கவோ வேறு பள்ளிக்கோ கல்லூரிக்கோ போக பெற்றோர்கள் / குழந்தைகள் விரும்பும் பட்சத்தில் அப்போது வடிவேல் பழனியம்மாள் அறக்கட்டளை அந்த குழந்தையின் பெற்றோர்கள் தந்த நன்கொடையை திரும்ப அந்த குழந்தைக்கு பரிசாக தந்து விடும். இந்த தொகையை முழுதாக ஒரே சமயத்தில் கட்ட தேவையில்லை இரண்டு தவணையில் செலுத்தலாம். இந்த நன்கொடை பள்ளியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். இது சம்பந்தமாக பெற்றோர்களின் கருத்துக்களுக்காக காத்திருப்பதாக கூறி தனது உரையை பேராசிரியர் சீனிவாசன் முடித்தார்.

பின்னர் வீட்டில் பெற்றோர்கள் குழந்தைகளுடைய கற்றல் கற்பித்தல் விஷயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய குறும்படம் ஒன்று காண்பிக்கப்பட்டது. பின்னர் பெற்றோர்களிடம் கருத்து கேட்கப்பட்டது. நான்காம் வகுப்பு குழந்தைகள் அகர்சனா - அஜய்யின் அப்பா பேசுகையில் அவ்வைப் பள்ளியில் உடற்பயிற்சி கல்விக்கு தனி ஆசிரியர் இருந்தால் நன்றாக இருக்கும் என்றும் கால்பந்து எப்படி விளையாடுவது என்பது பற்றி சொல்லித்தரவேண்டும் என்று சொன்னார். ஐந்தாம் வகுப்பு அபிவதனியின் அம்மா பேசுகையில் கொரோனா காலங்களில் ஆன்லைன் பயன்படுத்தி வாட்ஸ் அப் பயன்படுத்தி பாடங்களை நடத்தியது சிறப்பாக இருந்ததாகவும் தம் குழந்தை அபிவதனி களிமண்ணால் அற்புதமாக பல உருவங்கள் செய்தது நல்ல கற்றல் அனுபவம் என்றும் மகளிர் தினத்தன்று பெண்கல்வி பற்றி தம் குழந்தைபேசி அதனை எல்லா பெற்றோருக்கும் பகிர்ந்தது நல்ல அனுபவமாக இருந்ததாக கூறினார். மேலும் நம் பள்ளி குழந்தைகள் சரளமாக ஆங்கிலத்தில் பேச பயிற்சிகளை பள்ளி தரவேண்டும், அதற்கான சூழலை பள்ளி உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஏன் சனிக்கிழமை பள்ளிநாளாக நமது பள்ளி அறிவிக்கக்கூடாது என்று ஒரு பெற்றோர் கேட்டார். அந்த நாளில் பள்ளி ஆசிரியர்கள் அடுத்த வாரத்துக்கான வகுப்பு அட்டவணை தயார் செய்கின்றனர். அவர்கள் வெளி ஊர்களில் இருந்து வல்லுநர்களுடன் காணொளி மூலம் கலந்தாலோசனைகளில் ஈடுபடுகின்றனர். அந்த நாள்

அவர்கள் தங்களை புதுப்பித்துக்கொள்ள வேண்டிய நாளாக இருக்கிறது. குழந்தைகள் பள்ளிக்கு வருவது மிகவும் அவசியம் என்று பெற்றோர்கள் கருதினால் அந்த நாளில் குழந்தைகள் பள்ளியில் என்ன கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடலாம் என்பது பற்றி அவ்வை அக்காக்கள் அண்ணாக்கள் சில பெற்றோர்கள் எல்லோரும் சேர்ந்து இது பற்றி முடிவுசெய்து வரும் ஆண்டில் செயல்படுத்தலாம் என்று தாளாளர் கூறினார். பின்னர் பள்ளியில் கற்றல் கற்பித்தல் சம்பந்தமாக தங்களது மேலான ஆலோசனைகள் இருந்தால் தரவும் என்று திரு சிவன் அவர்கள் வினவினார். ஆலோசனை தர விரும்பினால் எழுதியும் சமர்ப்பிக்கலாம் என்று கூறி ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் ஒரு தாள் விநியோகிக்கப்பட்டது.

இறுதியாக திரு சிவன் அவர்கள் இந்த கூட்டத்திற்கு வந்த எல்லா பெற்றோர்களுக்கும் அவ்வை அக்காக்களுக்கும் நன்றி கூற வந்திருந்த எல்லோரும் தேசிய கீதத்தை பாடினார்கள். கடைசியாக அவ்வை பள்ளி மாணவி ஹன்சனாவின் பெற்றோர் மனமுவந்து ஏற்பாடு செய்திருந்த வழங்கிய (ஸ்பான்சர் செய்த) மதிய உணவுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.


















Vegetables


Vegetables








Welcomes
To
parents
Meeting













